**நாமல்ஓயா பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 07 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாமல்ஓயா பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினனயும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் 04 வாகனங்கள் தொடர்பாக முன்னைய ஆண்டிற்குரியாதாகச் செலுத்தப்பட்ட வருமான அனுமதிப்பத்திரக் கட்டணமான ரூபா 49,800 தொகை மீளாய்வாண்டின் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கொட்டவெஹர பழைய வீதி கொங்கிறீட் இடும் செயற்திட்டத்திற்காக ஒப்பந்தகாரருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,901,810 கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிலுவை அனுமதிப்பத்திரக் ரூபா. 19,900 கட்டணத்தை பரீட்சிப்பதற்காக அனுமதிப்பத்திரக் கட்டணப் பதிவேடு ஒன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | பிரதேச சபை விதி 180 | சபையின் நிதி, களஞ்சியம் மற்றும் வருமானங்களைச் சேகரித்தல், தொடர்பான கடமைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களினால் பிணைப்பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 30/2016 (03.01) | சபைக்குச் சொந்தமான 20 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(3) | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 38,292 தொகையான வைப்புப் பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் வேலை நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 1,207,167 ஆன மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 2,209,706 ஆன மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினமாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 3,416,873 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வீதவரியும் வரியும், வாடகை வருமானம், சேவைகளுக்கான கட்டணம், ஏனைய வருமானம் மற்றும் ஏனைய உதவிகள் என்ற வருமான மூலங்களில் 25 சதவீதம் முதல் 540 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும், அனுமதிப்பத்திரக் கட்டணம், தண்டப்பணமும் பிடியாணைக் கட்டணமும் என்ற வருமான மூலங்களில் 01 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவையும் காண்பித்தது.

மீண்டெழும் செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது சம்பளமும் படிகளும், மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தல் செலவினம், போக்குவரத்து, தொடர்பாடல், உதவிப் பணம், ஓய்வூதியம் போன்ற

தலைப்புக்களில் 01 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும் பிரயாணச் செலவினம், வழங்கல் மற்றும் உபகரணம் என்ற விடயங்களில் 02 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவையும் காண்பித்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் போன்றவை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு இருந்தன.

| வருமான விடயம் | 2016 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2016 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வாடகை வருமானம் | 1,979,920 | 1,657,802 | 36,548 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 453,000 | 346,440 | 28,305 |
| தண்டப்பணமும் பிடியாணைக் கட்டணமும் | 1,107,000 | 932,014 | 269,708 |
| ஏனைய வருமானம் | 339,000 | 530,393 | 288,144 |

#### 2.3.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

பேரேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 28,305 ஆக இருந்ததுடன் அப்பணத்தை அறவிடுவதற்காக சபையினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.3 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப்பிரதேசத்தில் 05 தொலைகேசிக் கோபுரங்கள் காணப்பட்டதுடன் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் ஒரு தொலைபேசி கோபுரத்திற்காக ஆகக் குறைந்தது ரூபா 20,000 வீதம் ரூபா 100,000 அடிப்படைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் அறவிடவேண்டிய நிலுவை சந்தைக் கட்டணத் தொகையான ரூபா 15,008 அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.4 முத்திரைக் கட்டணம்

2016 சனவரி 01 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 235,144 தொகை பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டியதாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் சேவையாற்றிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை அறவிட்டதன் பின்னர் கணக்குகளில் மிகுதியாகக் காணப்பட்ட ரூபா 5,336 மீதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கொண்டு வரப்படுகின்ற ஊழியர் கடனான அறவிட வேண்டிய ரூபா 39,388 தொகையை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற 09 வாகனங்கள் தொடர்பாக வருமான அனுமதிப்பத்திரம் உரிய திகதியில் உள்ளவாறு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் ரூபா 22,755 தொகையான தண்டப் பணத்தை செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(ஈ) சபைக்குச் சொந்தமான ஓடக்கூடிய நிலையில் காணப்படுகின்ற 03 வாகனங்களுக்காக 2016 ஆம் ஆண்டிற்கான வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படாதிருந்ததுடன் 01 வாகனத்திற்காக காப்புறுதிச் சான்றிதழும் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையினால் ரூபா 1,743,377 செலவில் 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதி வரையில் பறகஹகெலே சனசமூக மண்டபம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் பொதுமக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 52 காணிக் கூறுகளின் உரித்து சபையின் பெயருக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் 2015 ஏப்ரல் 27 ஆந் திகதி சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 6,009,602 பெறுமதியான டிபர் வாகனம் ஓடக்கூடிய நிலையில் காணப்பட்ட போதிலும் அது பயன்படுத்தாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து 2016 சனவரி 12 ஆந் திகதி கிடைத்த ரூபா 60,000 பெறுமதியான நீர்த் தாங்கியொன்று பயன்படுத்தாமல் சபை வளவில் வைக்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.1 இன் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக ஒப்பந்த முறைமையின் கீழ் ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது உரிய அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 02 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், தீப்தி சமூக அமைப்பினால் ரூபா 1,928,393 பெறுமதியான வாவின்ன கடைத்தொகுதி நிர்மாணிக்கப்படுகின்ற போது ரூபா 1,861,530 பெறுமதியான PSDG

செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற மேலும் 02 செயற்திட்டங்கள் அந்த சமூக அடிப்படையிலான அமைப்பிற்கே வழங்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 13 சதவீதம் முதல் 404 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய விநியோகிக்கப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | i. நிலுவை வருமானத்தை அறவிடல் |
| | ii. உப விதிகளை விதித்தல் |
| | iii. வருமான மூலங்களை இனங்காணல் |
| (ஆ) ஒப்பந்த நிர்வாகம் | பாதீட்டின் பிரகாரம் வேலைகளை நிறைவேற்றுதல் |
| (இ) களஞ்சிய நிர்வாகம் | உடனடியாக சரி பிழைகளை பார்க்கக்கூடிய வகையில் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் |
| (ஈ) சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் உரித்தை கையேற்றல் |